★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 56630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

ம 3] சென்னை: மாசி 2 செவ்வாய் (14 2 56) ★ ★ வெளியூர்: மாசி 3உ புதன் (15—2—56) [இதழ் 208

வடக்கு—தெற்கு ஒன்ருக குட்டியம்மாளு அம்மா 'பேரம்!'

'வடக்கு—தெற்கு இவற்றை எப்படியாவது ஒன்ருக்கிவிட வேண்டும்; தென்ஞட்டில் இந்தியைப் புகுத்திவிட வேண்டும்' என்று பல 'பிரகஸ்பதி'கள் முயற்சிக்கின்றனர்; அவர்களிலே, கேரள காங்கிரஸ் தலைவியான குட்டியம்மாளு அம்மாவும் தனது கைங்கர்யத்தைச் செய்திருக்கிருராம்!

வடக்கும்—தெற்கும் ஒன்ருக ஒரு 'பேரம்' பேசவேண்டு மென்ருர்களாம், அந்த அம்மையார்!

"தென்ஞடு, வடநாட்டிற்குப் பல பொருள்களை அனுப்பி

(4-ம் பக்கம் பார்க்க)

பிப். 20—பொது வேலைநிறுத்தம்:

சங்கீதக் கச்சேரியில் தும்மப் போகிருர்களா?

பிப்ரவரி 20-ந் தேதி திங்கட்கிழமை பொது வேலைநிறுத்தம் (ஹர்த்தால்)

தொடர்ந்தாற்போலுள்ள தமிழ் பேசப்படும் பகுதிகள் 'தமிழ் ராஜ்ய'மாக அமையவேண்டும் என்பது தமிழர்களின் நீண்ட நாள் விருப்பமாகும். ராஜ்யங்கள் திருத்தி அமைக்கப்படும் போது, 'தமிழ் ராஜ்யம்' உருவாகும் என்றுதான் தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர். அத்தகைய 'தமிழ் ராஜ்ய'த்தை உருவாக்கும்படி, வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் இந்திய அரசினரையும், சென்னை அரசினரையும் மக்கள் வற்புறுத்தி வந்திருக்கின்றனர்.

'ராஜ்யங்களை மொழிவழித் திருத்தி அமைப்பதுதான் சிறந்த ஏற்பாடு' என்பதைக் காங்கிரஸ் உள்ளிட்ட எல்லா அரசியல் கட்சிகளுமே பல்லாண்டுகளாக ஒப்புக்கொண்டு வந்திருக்கின்றன. இந்த ராஜ்யங்களை மொழிவழியாகத் திருத்தி அமைப்பதாகக் கடந்த 30 ஆண்டுகளாக காங்கிரஸ் மகா சபையும வாக்குறுதி தந்து வந்திருக்கிறது. 1936-1946-1952 ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின் போது காங்கிரஸ் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் பிரகடனங்களிலும இந்த வாக்குறுதி சேர்க்கப் பட்டிருக்கிறது.

ஆனல், இப்போது ராஜ்யங்களைத் திருத்தி அமைப்பதற்கென்று இந்திய அரசினரால் நியமிக்கப்பட்ட பசல் அலிக் குழுவினர், தமிழ்ப் பெருங்குடி மக்களின் உரிமையையும், கோரிக்கையையும புறக்கணித்து அறிக்கை வெளியிட்டனர். தமிழ் ராஜ்யத்தில் இணைந்திருக்க வேண்டிய தேவிகுளம்-பீர்மேடு-செங்கோட்டை-நெய்யாற்றங்கரை - கொச்சின்-சித்தூர் - பாலக்காடு ஆகிய தாலுக்காகளிலுள்ள தமிழ்ப் பகுதிகளை, கேரள ராஜ்யத்துடன் இணைக்கும்படி இந்திய அரசினருக்குச் சிபாரிசு செய்துள்ளனர்.

மற்றும், வடக்கே சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளுக்கு எல்லைக் கமிஷன் அனுப்புவதாகச் சொன்ன வாக்குறுதியும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. பசல் அலி கமிஷனும் இதைப் புறக்கணித்திருக்கிறது. இவை, தமிழருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளாகும.

இந்திய அரசினர் இந்த அநீதிகளுக்கு ஆதரவு அளித்திருப்பதோடு, தமிழ் ராஜ்யத்தில் இருக்கவேண்டிய செங்கோட்டைத் தாலுகாவில் பெரும் பகுதியைப் பிரித்துக் கேரளத்தோடு இணைப்பதற்கு ஆதரவு அளிக்கத் தீர்ப்பு கூறியுள்ளனர். இது தமிழருக்கு இழைக்கப்பட்டுள்ள மாபெரும் அநீதியாகும். இந்தப் பகுதிகளெல்லாம் தமிழ் ராஜ்யத்தில் தான் இருக்கவேண்டும் என்பதற்கான எல்லாவகைச் சான்றுகளும், தெள்ளத் தெளிவாக இருக்கின்றன. இந்திய அரசினரால் இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதிகளைத் துடைப்பதற்கான வழிவகைகளைச் சென்னை அரசினர் தீவிரமாக மேற்கொள்ளவில்லை. எனவே, தமிழ் மக்களின் உண்மையான உள்ளக்கிடக்கையையும, உரிமை வேட்கையையும் சென்னை அரசினருக்கும், இந்திய அரசினருக்கும் உணர்த்த வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும.

அதுமட்டுமல்லாமல், தட்சிணப் பிரதேசம் அமைக்க மத்திய அரசினர் மேற்கொண்டுள்ள திடீர் முயற்சி எந்த ஜனநாயகத்திற்கு விரோதமானதென்பதோடு, தமிழ் ராஜ்ய அமைப்புக்கு உலை வைக்கும் கொடுஞ் செயலுமாகும. இந்திய அரசினரின் இத்தகைய நிலையற்ற-சந்தர்ப்பவாத நடவடிக்கைகளால் மொழிவழி இனங்களிடையே வீணன சச்சரவுகளும, போட்டிகளும விளைவதன்றி, உருவான பலன் எதுவும ஏற்படாதென்பதுடன், தேச ஐக்கியத்திற்கும் முன்னேற்றத்திற்கும் கேடு பயக்கும் என்றும நாங்கள் உறுதியாக நம்புகிருேம்.

மேலும், 'சென்னை ராஜ்யம்' என்று தமிழ் மாநிலத்திற்கு பெயர் இடப்பட்டிருப்பதை அகற்றிவிட்டுத் "தமிழ் நாடு" என்று பெயரிட வேண்டுமாய் வற்புறுத்த வேண்டியவர்களாகவும் இருக்கிருேம்."

இத்தகைய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு,

1. தட்சிணப் பிரதேசம் அமைப்பதென்ற கருத்தை அறவே கைவிட்டு மொழிவழி இராஜ்யம் அமைக்கப்பட வேண்டும்.
2. தமிழக எல்லையோரத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளை தமிழகத்தோடு சேர்க்கவும், பிற மொழிப் பகுதிகளை அதனதன் மொழி வழங்கும் இராஜ்யங்களோடு சேர்க்கவும் ஒரு எல்லைக் கமிஷன் நியமித்து ஜனநாயக வழியில் முடிவு செய்ய வேண்டும்.
3. 'சென்னை இராஜ்யம்' என்ற பெயர், 'தமிழ் நாடு' என்று மாற்றப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளின் பின்னல் தமிழர்கள் ஒருமனதோடு ஒற்றுமையாக நின்று வற்புறுத்துகிருர்கள் என்பதை இந்திய அரசினருக்கும், சென்னை அரசினருக்கும் உணர்த்தும் அறிகுறியாக, பிப்ரவரி 20-ம் நாள் திங்கட்கிழமையன்று பொது வேலை நிறுத்தமும் கடையடைப்பும் (ஹர்த்தால்) நடத்த வேண்டும் என்று சர்வகட்சிக் கூட்டணியால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே,

தொழிலாளர்களே!	தொழிலதிபர்களே!
ஆசிரியர்களே!	மாணவர்களே!
பணிகள் புரிவோரே!	பத்திரிகையாளர்களே!
அலுவலகம் நடத்துவோரே!	அலுவல்கள் செய்வோரே!
வர்த்தகர்களே!	வண்டிகள் ஓட்டுவோரே!
நாடகம் ஆடுவோரே!	சினிமா நடத்துவோரே!
ஓட்டல்காரர்களே!	நடிகர்களே!

மற்றுமுள்ளவர்களே, நீங்கள் அனைவரும்

பொது வேலைநிறுத்தத்தை

(ஹர்த்தாலை)

பிப்ரவரி 20-ம் நாள் திங்களன்று

வெற்றிகரமாகவும்—சிறப்பாகவும்

அமைதியான முறையில்
பலாத்காரம் தலைகாட்டாமல்
சேதம் விளைவிக்காமல்
யாரையும் துன்புறுத்தாமல்

கட்டுப்பாடுடனும் கண்ணியத்துடனும் நடத்திக்காட்டி தமிழரின் உரிமையையும் தன்மானத்தையும் நிலைநாட்டும்படி உங்களைப் பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிருேம்.

பி. டி. ராஜன் (நீதிக் கட்சி)	கே. விநயகம் (வடக்கெல்லை - பாதுகாப்புக் குழு)
கே. சி. சுப்பிரமணியம் "	சித்தூர் சீனிவாசன் "
சி. என். அண்ணுதுரை (தி. மு. க.)	ஏ. ரத்தினம் (தாழ்த்தப்பட்டோர் -
இரா. நெடுஞ்செழியன் "	எம். சுந்தரராஜ் " பெடரேஷன்)
என். வி. நடராசன் "	கவிஞர் பாரதிதாசன் (புதுவை - மக்கள் முன்னணி)
ம. பொ. சிவஞானம் (தமிழரசுக் -	வி. சுப்பையா "
சின்ன அண்ணுமலை " கழகம்)	எஸ். சுயம்பிரகாசம் (பார்லி - மெண்டரி கட்சி)
ஜி. உமாபதி "	எம். பி. சுப்பிரமணியம் "
ப. ஜீவானந்தம் (கம்யூனிஸ்டு கட்சி)	வி. வி. இராமசாமி "
மணலி கந்தசாமி "	நாரண துரைக்கண்ணன் (எழுத்தாளர் சார்பில்)
ஏ. எஸ். கே. அய்யங்கார் "	டி. கே. சண்முகம் (நடிகர் சார்பில்)
எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை - (சோஷலிஸ்டு)	ஏ. கஜபதி நாயகர் (தமிழர்பேரவை)
எம். சின்னசாமி "	பினச்சர் (இணைப்புக் கமிட்டி)
பி. எஸ். சின்னதுரை (பிரஜா - சோஷலிஸ்டு)	
ஏ. சுப்பிரமணியம் "	

—சர்வ கட்சி கூட்டணி

காந்தியார் விளக்கம்

"அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டிக்க 'ஹர்த்தாலே' சரியான முறையாகும். தேசீய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக்கூட்டங்களை விடச் சக்திவாய்ந்த மார்க்கம் இது."

—1919-ல் 'யங் இந்தியா'வில்

*******-******-*****

காரியத்தைச் செய்வதுதான் கடினமானது; கெடுப்பது சுலபம்

'அலிபாபா' படம் காட்டுவதாகக்கூறி 'அலி பாதுஷா' படம் காட்டலாமா?

காங்கிரசார் பொறுப்பு பற்றி அண்ணு

பிப். 20—பொது வேலைநிறுத்தத்தின்போது, காங்கிரசாருடைய கடமை என்ன? 'ஒரு காரியத்தைச் செய்வது கடினம்; அதைக் குலைப்பது சுலபம்' என்பதை உணர்ந்து கூட்டணியுடன் காங்கிரசார் ஒத்துழைப்பார்களா?—என்றெல்லாம் மக்கள் அறிய விரும்புவதையொட்டி, அண்ணு அவர்கள், காங்கிரசாருக்குரிய கடமையை வற்புறுத்தியுள்ளார்.

சென்னை-சேப்பாக்கத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் தொடர்ச்சி இங்கு ...ப்படு கிறது; மற்ருெரு பகுதி 4-ம் பக்கத்தில் வெளிவந்திருக்கிறது.

"தட்சிணப் பிரதேசம் என்ற திட்டம் உருப்பெறுமானுல், தமிழ் நாட்டில் மட்டுமல்ல—கேரளத்திலும் பெரும் போராட்டங்கள் நடைபெறும் என்பதையும் சர்க்கார் கவனத்தில் கொள்ள வேண்டும்.

"தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படுமானுல், அடுத்த பொதுத் தேர்தலில், கேரளப் பகுதியில் காங்கிரஸ் வரமுடியாது; சந்தேகமில்லாமல் கம்யூனிஸ்டுகள்தான் வெற்றி பெறுவர்!

"தேவிகுளம்—பீர்மேடு எல்லை நிர்ணயம் பற்றிய தொல்லையிலிருந்து நீங்குவதற்காக இந்தத் 'தட்சிணப் பிரதேசம்' என்ற திட்டத்தைக்கொண்டுவரும் சர்க்கார், மேலும் புதிய தொல்லைகளைத்தான் சந்திப்பார்கள்.

"இன்று படம் ஒன்று பார்த்தேன்—காங்கிரசை ஆதரிக்கும், 'குமுதம்' இதழில்; 'பம்பாய் கலகம்' என்ற புலி வாயிலிருந்து தப்ப 'தட்சிண இராஜ்யம்' என்ற முதலை வாயில் ஒருவன் விழப் போவதுபோல் அப்படம் சித்ரிக்கப்பட்டிருக்கிறது.

"'பம்பாய் கலகம்' என்பதற்கு மாருக—'இன எழுச்சி' என்றிருப்பதற்கு மாருக, 'இனமொழி எழுச்சி' என்று குறிப்பிட்டிருந்தால் பொருத்தமானதாக இருந்திருக்கும். புலிக்குப் பயந்து முதலை வாயில் விழுவதைப்போல, தேவிகுளம்—பீர்மேடு வட்டங்களைத் தமிழகத்துடன் இணைப்பதற்குப் பயந்துகொண்டு, 'தட்சிணப் பிரதேச'த் திட்டத்தை கொண்டுவருவது விவேகமானதல்ல!

"காங்கிரசார் ஒரு காலத்தில் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்தபோது, மொழி உணர்வையும், நாட்டுப் பற்றையும் மக்களுக்கு ஊட்டினுர்கள்; செஞ்சியைக் காட்டினுர்கள்; தேசிங்கு ராஜனைக் கவனமூட்டினுர்கள்; 'கம்பநாடு—கம்பர் மொழி' என்று பேசினுர்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

பிப். 20—சர்வகட்சி ஹர்த்தால் :

'இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்களும் பங்கு பெறலாம்'

" இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்கள் பிப். 20-ந் தேதி சர்வகட்சி ஹர்த்தாலில் கலந்துகொள்ளலாம்."

—இவ்வாறு, 5—2—56 அன்று திருச்சி தேவர் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் பேசுகையில் பெரியார் ஈ. வெ. ரா. குறிப்பிட்டிருக்கிறார். —'தினமணி' : 8-2-56

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 14—2—'56 செவ்வாய்

தலை வெட்டுவது மேல்!

பம்பாய் நகரில் நடைபெற்ற நாசவேலைகளை, இந்தியப் பிரதமர் நேரு, 'நாகர்களின் தலை வெட்டும் வெறியாட்டத்தை விடக் காட்டுமிராண்டித்தனமானது' என வர்ணித்தார். 'அதை அடக்கியே தீருவேன்' எனக் கர்ஜித்தார்.

எதற்கும், எதைப் பெறுவதற்கும், எந்த உருவிலும் பலாத்காரம் கூடாது என்பதுதான் நமது அடிப்படை கோட்பாடு. அதை வெற்றிகரமாகச் செயலாற்றுவதற்கே நமது ஆர்வமும், ஆசையும், ஆற்றலும் இது வரை செலவழிக்கப்பட்டுள்ளன. இனியும், அதனின்று நாம் மாறப்போவது கிடையாது.

பம்ப[illegible] நகரில், நாச வேலைகளில் [illegible]டுபட்டார்கள் என்பதற்[illegible], 'தலைகளை வெட்டுய [illegible] செயலை நித்தியப் பணி[illegible]ாகக் கொண்டிருக்கிற மலைவாழ் நாகர்களைக் காட்டிலும் கீழான காட்டுமிராண்டிகள், வீரஞ்செறிந்த மராட்டிய மக்கள்' என இந்தியப் பிரதமர் நேரு, நாத்தழும்பேற நவில்கிறார். அவர்கள் நாச வேலைகளை மேற்கொண்டனர் என்ற ஐயத்திற்குரிய ஒரு செய்தியை ஆதாரமாகக் கொண்டு, மராட்டிய மக்களை இழித்துப் பழித்துத் தூற்ற நேரு முன்வருகிறார். ஆனால், அதே நேருதான், அப்பெருங்குடி மக்களின் வீரத்தை, நெஞ்சுரத்தை, நற்பண்பை, முன்பெல்லாம் நாவார, மனமாரப் பன்முறை பாராட்டியுள்ளார்.

தான் காட்டிய வழியில், கைகட்டி வாய்பொத்தி பின் தொடர்ந்து பணியாற்றியகாலை, மராட்டியரின் வீரம், தீரம், நற்குணம் மட்டுமே பண்டிதரின் கண்களுக்குப்பட்டன. ஆனால், தன் ஆணை வழி ஆட மறுத்து, தன்னையே எதிர்க்கத் துணிந்துத் திணறடித்துவிட்டதும், அவர்கள் புரிந்ததாகச் சொல்லப்படும் பலாத்காரச் செயல்களை ஒரு புகலாகக்கொண்டு, மராட்டிய மரபுக்கே, 'நாகர்களிலும் கடைகெட்டக் காட்டுமிராண்டிகள்' என்ற வசைமொழியைச் சூட்டுகிறார் இந்தியப் பிரதமர் நேரு.

இது என்ன நாக்கு? இது என்ன விசித்திரப் போக்கு?

பம்பாய் நகரில் நடைபெற்ற நாசவேலைகள் அனைத்துக்கும் மராட்டியர்களே முழுதும் பொறுப்பாளிகள் என்பதை வாதத்திற்காகவாவது ஒப்புவோம். ஆனால் அதற்காக, சிவாஜி வழிவந்தவர்களை, துறைகள் அனைத்திலும் காட்டு மக்களாகவே இன்னும் வாழ்ந்து வரும் நாகர்களோடு ஒப்பிட்டுப் பேச முற்படுவது, இந்தியப் பிரதமர் நேரு போன்றவர்களால்தான் முடியுமேயல்லாது நம் போன்றவர்களால் அது அறவே முடியாது.

வடமேற்குஎல்லைப்புற மலைப் பகுதியில் நாகர்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு 'நாகரீகத்தை'ப் பயிற்றுவிக்கும் பணியில் நேரு அரசாங்கம் ஈடுபட்டு இருக்கிறது. அதனைப் புலனுக்குத் தங்கள் உரிமை வாழ்விற்கு முடிவேற்பட்டு விடுமோ என்ற அச்சத்தால், இந்திய அதிகாரிகளின் தலைகளை நாகர்கள் வெட்டித் துண்டிக்கவும் துணிகின்றனர். அத்தகு காட்டுகுணம் கொண்டவர்களைத்தான், மொகலாய சக்ரவர்த்தியைத் திணறடித்த சிவாஜியின் பின்சந்ததியினருடன் ஒப்பவைத்துப் பார்த்து, தெளிந்து கூறுகிறார் நேரு—'நாகர்களிலும் மராட்டியர்கள் கடைகெட்டவர்கள்' என்று.

நாட்டு விடுதலை வேண்டி நின்றவர்களைக்கூடத்தான் 'நாகரீகமற்றவர்கள்' என்று ஆங்கில ஏகாதிபத்தியம் எத்தனையோ முறை கூறியிருக்கிறது. அதுக்கூட, இந்தியப் பிரதமருக்கு இருக்கும் வாய்மதம் இருக்கவில்லை — காட்டு குணம் கொண்ட மலைவாழ் மக்களுடன் ஒப்பிட்டு, அந்நாள் விடுதலை கோரிய மராட்டிய மாவீரர்களை நையாண்டி செய்வதற்கு! ஆனால், இந்தியப் பிரதமர் நேருவிற்கு இருக்கிறது — மராட்டியர்களைக் காட்டுகுணம் படைத்தவர்களிலும் கடையர்கள் என்று ஏச—மாசு கறபிக்க!

'தலைவெட்டும் வெறிச் செயலில் திறமை பெற்றுள்ள மலை ஜாதியினரான நாகர்கள் நாகரீகமானவர்களா? பம்பாய் கலவரத்தில் ஈடுபட்டுள்ளதாகச் சொல்லப்படும் மராட்டிய மக்கள் நாகர்களிலும் மிஞ்சிய காட்டுமிராண்டிகளா?' என்ற ஆராய்ச்சியை இந்தியப் பிரதமருக்கே விட்டுவிடுவோம்.

மராட்டிய மக்களைக் காட்டு குணம் படைத்தவர்கள் என்று ஏசும் பண்டிதர், 'எதேச்சாதிகாரமாக நடப்பதில் நிபுணரா? அல்லது மலைவாழ் மக்களான நாகர்கள் நிபுணர்களா?' என்பதை ஆராய்வோம்.

திரு-கொச்சியில் இணைக்கப்பட்டுள்ள தேவிகுளம—பீர்மேடு பகுதிகளில் தமிழ் மக்களே பெருந்தொகையினராக உள்ளனர். இரண்டு பொதுத் தேர்தல்களில், அத்தமிழ்ப்பகுதிகள் சென்னைத் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்பதை மூலப் பிரச்சினையாக்கொண்டு தேர்தலில் கலந்துகொண்ட தி. [த]. நா. காங்கிரஸ் அபேட்சகர்களையே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

அப்பிரச்சினைக்கு எதிராக தேர்தலில் கலந்துகொண்டு தி. கொ. காங்கிரஸ் அபேட்சகர்களை, இரண்டு முறையும் அப்பகுதி மக்கள் தோற்கடித்து இருக்கிறார்கள். இந்தியப் பிரதமர் நேருவும், தமிழர்களின் 'துரோகி' முதலமைச்சர் காமராசரும், திரு—கொச்சி காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரம் செய்திருந்தும்கூட அவர்களால் ஆதரிக்கப்பட்ட காங்கிரஸ் அபேட்சகர்கள் தோற்கவும், அவர்களால் தூற்றப்பட்ட தி. த. நா. கா. தமிழ் அபேட்சகர்கள் வெற்றி பெறவுமான நிலை, ஒரு முறையல்ல—இருமுறை ஏற்பட்டு இருக்கிறது.

'தேவிகுளம்—பீர்மேடு முதலிய திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகள் சென்னைத் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும்' என்ற தீர்மானத்தை சென்னை சட்டசபை நிறைவேற்றி இருக்கிறது; அது, இந்தியப் பேரரசிற்கு அனுப்பப்பட்டும் இருக்கிறது.

திரு-கொச்சியில் நடைபெற்ற இரு பொதுத் தேர்தல்களிலும தமிழர்களுக்குக் கிடைத்துள்ளது, அங்குள்ள தமிழ் மக்களின் நல்ல தீர்ப்பாகும். அத்தீர்ப்பில், அத்தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கை பிரதிபலித்துக் கொண்டு இருக்கிறது.

சென்னை சட்டசபையின் தீர்ப்பிலும், இங்குள்ள தமிழ் மக்களின் ஒருமனமான கருத்து நிரபபி இருக்கிறது.

இவ்விரண்டும தமிழ் மக்களின் முடிவு.

இம்முடிவிற்குக் கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார் இந்தியப் பிரதமர் நேரு. மக்களாட்சியில் உள்ள புனிதமான ஒரே வழி அதுதான்.

ஆனால் இந்தியப் பிரதமரோ, தமிழர்களை முதுகுப்புறத்தில் குத்துவதின் மூலம, மக்களாட்சி முறைக்கே கல்லறை கட்டிவிட்டார்!

எதேச்சாதிகாரத் தீர்ப்புத் தந்துள்ளார்!

சர்வாதிகாரிபோல் முடிவு கூறியுள்ளார்!

மக்களாட்சிக்கும் தமக்கும் நெடுநாள் பகை என்பதைக் காட்டிக் கொண்டுள்ளார்!

மக்களாட்சி முறை தமக்கு வேப்பு—எட்டி என்று, நடைமுறையில் உறுதி செய்துவிட்டார்!

உதடோ, ஜனநாயகம் பேசுகிறது! உள்ளமோ, அகந்தையின் கருக்கூடமாகக் காட்சி தருகிறது! செயலோ, எதேச்சாதிகார நெடிநாற்றம் வீசுவதாக இருக்கிறது!

வடமேற்கு எல்லைப்புற மலைப் பகுதிகளில் வசிக்கும் நாகர்கள்கூட, இந்தியப் பிரதமர் போன்று தான்தோன்றிகளாக நடந்துகொள்ள மாட்டார்கள்!

நாகர்கள், பிறமக்களின் தலையைத்தான் வெட்டுவார்கள்!

ஆனால் இந்தியப் பிரதமரோ, நாகரீக மக்களின் ஒருமித்த கருத்தையே, அதிகார வாள் கொண்டு வெட்டி வீழ்த்துகிறார்!

தனி நபர்களை, தலை இழந்த முண்டங்களாக்குகின்றனர், நாகர்கள்!

அவர்களோ, மலைப்பகுதியில் காட்டு விலங்குகளுடன் வாழ்வதால் காட்டுகுணம் மாறாது, காட்டாட்சி நடத்தி தலை வெட்டும் வெறிச் செயலில் ஈடுபட்டு வாழ்ந்து வருகிறார்கள்!

ஆனால், இந்தியப் பிரதமர் நேருவோ அப்படிப்பட்டவர் அல்ல—நாட்டிலே வாழ்பவர்; நாகரீகம் தெரிந்தவர்; பல நாட்டு நற்பண்பாளர்களுடன் கைகுலுக்கிப் பழகுபவர்; நல்லியல்பு கொண்டவர்—என, மற்றவர்களால் சிறப்பிக்கப்படுபவர்.

அத்தகு திருக்கல்யாண குணம் கொண்ட திருமேனியார்தான் மக்களாட்சியை, மக்களிடமிருந்துத் துண்டித்துத் தள்ளுகிறார்! மக்களை, காட்டு குணம நிரமபிய காலகட்டத்திற்குத் தூத்துகிறார்—விரட்டி விரட்டி அடிக்கிறார்!

காட்டுகுணம் கொண்டவர் நேருவா? — நாகர்களா? — முடிவுகூறும் உரிமை வாசகர்களுக்கு!

'அப்போது ரொட்டி கேட்டோம்; குண்டு தந்தனர்'

'இப்போது 'தமிழ்நாடு' கேட்கிறோம்; 'தட்சிண ராஜ்யம்' தருகின்றனர் டில்லியாளர்'

சென்னையில் அண்ணா விளக்கம்

சென்னை— சேப்பாக்கம் டாக்டர் நடேசனார் மன்றத்தில் 8-2-56 அன்று அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது :—

" காங்கிரசாருக்குச் சொல்ல விரும்புகிறேன்—தேவிகுளம்-பீர்மேடு வட்டங்களை காமராசர் மந்திரி சபை தமிழகத்திற்குப் பெற்றுத் தந்தால், வரப்போகும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் ஆட்சிக்கு வரக்கூடும்; அந்த அரசியல் சூட்சுமத்தைக்கூட நான் சொல்லி விடுகிறேன்; இல்லாவிட்டால் நாங்கள்தான் தேர்தலில் வெற்றி பெறுவோம். (ஆரவாரம்)

'நான் ஏன் இதனைக் கூறுகிறேன் என்றால், காங்கிரசாருக்கு வேறப்படிக் கூறினாலும் புரியாது.

'காங்கிரசார் வேறெதை வேண்டுமானாலும் இழந்து விடச் சம்மதிப்பார்கள்; தேர்தலில் பெறும் வெற்றியை மட்டும் இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள்; அதனால்தான்!

"இன்று மந்திரி சபைகள் அமைவது, நமக்குள்ள ஜனநாயக அரசியல் முறைப்படி.

'காமராசர் பதவியிலிருப்பது, தேர்தலில் வெற்றி பெற்றதால்தானே தவிர, ஆக்ஸ்போர்டில் ஆறு வருடம் படித்தார் என்பதினாலோ, அரசியல் மேதை என்பதினாலோ அல்ல!

ஓட்டுப் பெட்டிகளிலிருந்து தான் மந்திரிகள் வருகிறார்கள்; இதனை மனதிலே கொண்டேனும் காங்கிரசார், என்ன, அடுத்த தேர்தலில் நாம் வருவதற்கு ஆபத்தாமே!' என்பதை காமராசருக்குச் சொல்லியாக வேண்டும்.

"'மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்'—என்பது பழங்கதை. இந்தக் காலத்து மந்திரிகள், 'இருக்கிற பொருளை இழக்காமலிருந்தால் அதுவே போதும்' என்றாகிவிட்டது; எனவே, மறுபடியும் காங்கிரஸ்தான் நாட்டை ஆளவேண்டும்—அதிகாரத்திலிருக்க வேண்டுமானால், காங்கிரசார், தேவிகுளம்-பீர்மேடு வட்டங்கள் தமிழகத்திற்குக் கிடைக்க நடைபெறும் போராட்டத்தில் பங்கு பெற்றாக வேண்டும்.

நாளை காங்கிரசார், கட்சிக்காக 'வாக்கு'க் கேட்கச் செல்லும் போது, தமிழ் மக்களும் தமிழ்த்தாயும் என்ன கேட்பார்கள்?—

'யாருக்கப்பா ஓட்டு கேட்கிறாய்?'

'அருணாசலத்துக்கு!'

'அருணாசலம் எந்தக் கட்சி?'

'காங்கிரஸ் கட்சி!'

தேவிகுளம்—பீர்மேடு தாலுகாக்களை மோசடிவிட்டதே அந்தக் கட்சியா? நேரு மந்திரி சபை முகத்தில் கரி பூசினாரே, அந்தக் கட்சியா? சட்டசபைத் தீர்மானத்தைக் குப்பைத் தொட்டிக்கு அனுப்பியபோதும் பார்த்துக்கொண்டு வாளாவிருந்ததே, அந்தக் கட்சியா?'

என்றெல்லாம் அவர்கள் கேட்காமலிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டாமா, காங்கிரசார்!

"புருஷன் அடித்ததுகூடக் கோபமில்லை; அண்டை வீட்டுக்காரி சிரித்தாளே அதில்தான் கோபம்—என்பார்களே, அதுபோல காங்கிரசார், தேவிகுளம - பீர்மேடு போனால்கூடப் பரவாயில்லை; பதவி போய்விடுமென்கிறார்களே என்பதற்கேனும் பயந்து காரியமாற்றவேண்டும்!

'தேவிகுளம்—பீர்மேடு வேண்டுமென நாம் கேட்கிறோம்; 'தட்சிண ராஜ்யம் தருகிறோம்' என்கிறார்கள் டில்லியாளர்கள்!

'நாம் ரொட்டி கேட்கிறோம்; வெள்ளையர், குண்டுகளைத் தருகிறார்கள்' என்று கவிக்குயில் சரோஜினி அம்மையார் பாடினார்கள்; அவர் போன்றவர்களால் ஆக்கப்பட்ட காங்கிரஸ் இன்று ஆட்சிப் பொறுப்பிலிருக்கும்போது, நாம் கேட்பது ஒன்றாயிருந்தால், தருவது வேறாக இருக்கிறது! நாம் தமிழ் நாடு கேட்கிறோம்—'தட்சிண ராஜ்யம் தருகிறோம்' என்கிறார்கள்.

"'தட்சிண ராஜ்யம்' என்ற எண்ணம், சட்டசபையில் தெரிவிக்கப் பட்டதா—இல்லை; பணிக்கர் கூறினாரா—இல்லை; பசல் அலி குழு கூறிற்றா—இல்லை; அதனைப் பேட்டி கண்டபோது இங்குள்ளோரா கூறினார்களா—இல்லை!

"கமிஷன் அறிக்கையைப் படித்த ஒருவராவது தெரிவித்தாரா—இல்லை! அப்போதெல்லாம் 'தட்சிண ராஜ்யம்' என்ற பேச்சு இல்லை!

"தமிழர்கள், தங்கள் எல்லைகளை நியாயமாக நிர்மாணிப்பதற்காக ஒன்றுபட்டு போராடுவதற்கு முற்பட்ட பின்புதான் அந்தப் பேச்சு வருகிறது.

"தமிழர்கள் தங்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய பகுதிகளைக் கேட்கும்போது 'இவை போனால் என்ன? இந்த நஷ்டத்தை ஏன் பெரிதாக மதிக்கிறீர்கள்?' இந்த நஷ்டத்தால் மனம் கஷ்டப்படுகிறதென்றால், பக்ராநங்கலைப் பாருங்கள்; ஹீராகுட் அணையைப் பாருங்கள்' என்று கூறுகிறார்கள்!

"'மனைவி பறி போய்விட்டால் என்ன? அவள் உடுத்தியிருந்த சேலை இல்லையா?' என்று கூறும் புத்திசாலித்தனத்தைப் போலிருக்கிறது, இவர்கள் பேசுவது!

செவ்வாய் மண்டலம்

படம் பிடிக்கத் திட்டம்

ஜூன் மாதத்தில் பூமிக்கு 3,50,00 000 மைல்களுக்கு அருகில் செவ்வாய்க் கிரகம் வரும் என்று வானசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள்; அப்போது அதைப் படம் பிடிக்க, பிரிட்டிஷ் கம்பெனியொன்றைச் சேர்ந்த குழுவினர் திட்டமிட்டிருக்கிறார்கள்.

சந்திர மண்டலத்தைப் படம் பிடிப்பதில் வெற்றிகண்ட எஞ்சினீயர்கள், வியாழன் கிரகத்தைப் பற்றியும், ஆராய்ச்சி செய்துவருகிறார்கள்.

Bleed through.

காமராசர் நமது நலன்களின் காவலர் அல்லர்— வடநாட்டு ஆட்சியாளர்களின் 'கட்டியக்காரர்'தான்!

பழனி பொதுக்கூட்டத்தில் மதியழகன் விளக்கம்

"தமிழர்களின் நல்வாழ்வு, உரிமைகள் ஆகியவை, இந்த நாட்டை ஆளும் வாய்ப்புப் பெற்ற காமராசரால் காப்பாற்றப்படும் என்றுதான் மக்கள் எண்ணினர்; ஆனால், அடுக்கடுக்காக நடைபெற்ற சம்பவங்கள், காமராசர் நமது நலன்களின் காவலரல்ல — வடநாட்டு ஆணவ அரசின் கட்டியக்காரர் என்பதையே நமக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறது"

என்று, 9-2-56 மாலை 6 மணிக்கு, பழனி நகர தி. மு. கழகச் சார்பில நடைபெற்ற பிப 20—பொது வேலைநிறுத்த ஆதரிப்புக் கூட்டத்தில் பேசுகையில், தோழர் கே. ஏ. மதியழகன் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு ஆயக்குடித் தோழர் சண்முகம் தலைமை வகித்தார்.

ஆரம்பத்தில் தோழர் தமிழரசன் பேசினார்.

பின்னர் தோழர் பெருமாளால், தட்சிணப் பிரதேசத்தை எதிர்த்தும், தேவிகுளம்—பீர்மேடு சம்மந்தமான அநீதியைக் கண்டித்தும் தீர்மானம் படிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பின்னர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்குப் பல கிளைக் கழகங்களின் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

தொடர்ந்து தோழர் கே. ஏ. மதியழகன் பேசியதாவது:—

"காமராசர் தமிழ்க் குடியிலே பிறந்தவர்—தமிழ் உணர்வு அவருக்கு இருக்கும் என்றே இந்த மக்கள் எண்ணினர்; அவரோ இந்த நாட்டிற்குத் 'தமிழ் நாடு' 'தமிழகம்' என்பது கூடாது; 'சென்னை இராஜ்யம்' 'மதராஸ்' என்றுதான் இருக்கவேண்டும்; அப்போதுதான், அமெரிக்காக்காரனுக்குத் தெரியும்; ஆங்கிலேயக்காரனுக்குப் புரியும்; ஐஸ்லாந்துக்காரனுக்கு விளங்கும்; அயர்லாந்துக்காரனுக்கு அர்த்தமாகும்—என்ற பாணியிலே விளக்கமுரைக்கிறார். இந்த விசித்திர புருஷர் மூலம் தமிழர் நலன் பாதுகாக்கப்படும் என்று நாம் இன்னமும் எப்படி நம்புவது?

"உண்மையில் தமிழர் மீது காமராசர் சர்க்காருக்கு அக்கரையிருந்தால், அதைக் காட்டிக்கொள்ள அருமையான சந்தர்ப்பம் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. பட்டம் தாணுபிள்ளையின் சர்க்கார், மார்த்தாண்டம் என்ற இடத்தில் பட்டப் பகலில் பதினொரு தமிழர்களைத் துப்பாக்கிக் குண்டுக்கு பலியிட்டுப் பிணமாக்கியது; அப்போது வாய்மூடி மௌனியாய் இருந்தவர்களிடம் நாம் வேறு எதனை எதிர்பார்ப்பது?

"மாநிலப் புனரமைப்புக் குழுவாவது, 'செங்கோட்டை தாலுகா முழுமையும் தமிழ் நாட்டுடன் சேரும்,' என்று கூறியது. சில நாட்களுக்கு முன்பு, 'செங்கோட்டையின் மேற்குப் பகுதி மலையாளத்துடன் சேரும்' என்று டில்லியிலிருந்து செய்தி வந்தவுடன் நாம் மனம் கொதித்தோம்; ஆனால், அந்த அநீதியையும் காமராசரே செய்திருக்கிறார் என்பதற்குத் திரு-கொச்சி முதன்மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் சாட்சி சொல்லியிருக்கிறார்; 'செங்கோட்டையின் மேற்குப் பகுதி கேரளத்தில் சேருவதற்குக் காரணம், சென்னை சர்க்காரும்—நாங்களும் சேர்ந்து ஒத்துக்கொண்ட பரஸ்பர உடன்பாடு' என்கிறார் இருப்பதையும் எடுத்து, 'இந்தா எடுத்துக்கொள்,' என்று சொல்லும் இந்த அக்கரையற்றவர்களால் தேவிகுளம்—பீர்மேடு காப்பாற்றப்படாததில் ஆச்சரியமில்லை. எனவே நமது எதிர்காலம், உங்களது ஒற்றுமையில்—உணர்ச்சியில—ஆர்வத்தில்—பிப் 20-ந் தேதி நீங்கள் நடத்திக்காட்ட இருக்கும் அணிவகுப்பின் வெற்றியில்தான் உள்ளது."

தோழர் மதியழகனை தமிழரசுக் கழக முக்கியஸ்தர்களும், கம்யூனிஸ்டுக் கட்சி நண்பர்களும் சந்தித்து பிப். 20 குறித்துப் பேசினார். (சு.-நி)

இந்தியாவில் மோட்டார் கார்கள் உற்பத்தி 50 சதவிகிதம் பெருகியிருக்கிறது 1955-ல் மொத்தம் 22 528 மோட்டார் கார்கள் உற்பத்தி செய்யப்பட்டன; 1954-ல் உற்பத்தியான கார்களின் எண்ணிக்கை 14,462.

மதுராந்தகத்தில் அண்ணா

11-2-56 மாலை 6 மணிக்கு, மதுராந்தகம் தி. மு. கழகக் கிளை சார்பில், கொடியேற்று விழாவும், கழகக் கட்டிடத் திறப்பு விழாவும் நடைபெற்றது. விழாவிற்கு அண்ணா தலைமை தாங்கினர்.

பொதுக்கூட்டம் தோழர் ஜே. ஏ. வகாப் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் போளூர் கே. சுப்பிரமணியம், அண்ணா ஆகியோர்களும், தேவிகுளம், பீர்மேடு குறித்தும், பிப். 20-ந் தேதிப் பொதுவேலை நிறுத்தம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தில் தோழர் பி. வி. நடராசன் அவர்களுடைய ஆண் மகவுக்கு 'வீரமணி' என்று அண்ணா அவர்களால் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

அருங்குணம் குறள்நெறிக் கழகம், மற்றும் பல கழகங்கள் சார்பில் அண்ணா அவர்களுக்கு மலர்மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

'நம் நாடு' நன்கொடை வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

பிப்ரவரி 20!

"ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், மொழி வாரிக் கோரிக்கையின் பூரண உரு

"பிப்ரவரி 20-ம் தேதியன்று நடைபெற இருக்கும் ஹர்த்தால் (வேலை நிறுத்தம்) வெற்றிகரமாக நடத்துவதென்ற சர்வ கட்சி முடிவை ஆதரித்து ஒத்துழைப்பதென சென்னையில் கூடிய தமிழ் நாடு சோஷலிஸ்டுக் கட்சியின் நிர்வாகக் கமிட்டி முடிவு செய்துள்ளது.

"சோஷலிஸ்டுக் கட்சி மொழி வாரிக் கோரிக்கையை முழுக்க முழுக்க ஒத்துக்கொள்கிறது. 'தமிழ் நாடு' என்கிற மொழிவாரி ராஜ்யம் எல்லைப் பகுதிகள் இங்கு சேராத வரையில் அரைகுறையானதாகவே இருக்கும்.

வத்திற்காகவும், தமிழ்ப் பொது மக்களின் எதிர்காலப் பாதுகாப்புக்காகவும், போராடவேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டனர், நேரு சர்க்கார்.

"நேருவின் முடிவு சரிதானென்று இங்கு இருக்கும் தொண்டரடிப்பொடி ஆழ்வார்கள் தாளம் போடுகின்றனர்.

"இந்நிலையில், ஒன்றுபட்ட உணர்வு தமிழக அரசியல் கட்சிகளிடையே பெருகியிருப்பதை வரவேற்கிறோம்; இது நல்ல சகுனம்.

"தமிழ் மக்களின் மத்தியில் இருக்கும் உணர்ச்சிகளை உருவகப்படுத்தி ஒழுங்கான முறையில் செயல்படச் செய்வதற்கு இந்தத் தற்காலிகக் கூட்டணி பெரிதும் பயன்படும் என்பது நமது நம்பிக்கை.

"தீர்க்கதரிசனத்துடன் நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்தக் காங்கிரஸ் எதிர்ப்பு அணி தனது முயற்சிகளில் முழு வெற்றியும் அடையும் என்பதில் நமக்குச் சந்தேகமே கிடையாது.

"அறிக்கை வரவில்லையே— ஆணை கிடைக்கவில்லையே—என்று ஆலோசிக்காமல், [illegible] தமிழகத்தில் சோஷலிஸ்டுக் கட்சியின் [illegible] 'யூனிட்'கள் காட்டிய [illegible] போற்றற்குரியதாகும். [illegible] சேலம், வேலூர், ஆற்காடு, [illegible] மல்லி, சிதம்பரம், சிவகங்கை, சென்னை ஆகிய இடங்களிலுள்ள 'யூனிட்'கள் தனியாகவும், தி. மு. கழகம், தமிழரசுக் கழகம் ஆகிய அமைப்புக்களுடன் சேர்ந்தும், கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், 'ஹர்த்தால்' ஆகியவற்றை நடத்திக் காட்டியது, சோஷலிஸ்டு இயக்கத்திற்கு இப்பிரச்சினையில் இருக்கும் தீவிரத்தை எடுத்துக்காட்டுகிறது.

"சென்னை, அயன்புரம், வண்ணையம்பதி, ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, சிதம்பரம், நெல்லிக்குப்பம் ஆகிய இடங்களில் சர்வ கட்சிக் கமிட்டிகளில் சோஷலிஸ்டுக் கட்சித் தோழர்கள் முக்கிய அங்கம் வகித்து பொறுப்பேற்றிருக்கும் செய்தி கேட்டு பூரிப்படைகிறோம்.

"இதுவரை அம்முயற்சி தொடங்காத இடங்களிலும், மற்றக் கட்சித் தோழர்களைக் கலந்து, சர்வ கட்சிக் கமிட்டி நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்த முன்வர வேண்டியது கடமை என்று நினைவுறுத்துகிறோம்.

"தமிழகத்திற்குச் சேரத்தோடும், ஆந்திரத்தோடும் எல்லை விடயத்தில் ஏற்பட்ட சிக்கல் அறவழி நின்று போராடி தீர்வு பெற்றதில் நமது பங்கு—சோஷலிஸ்டு இயக்கத் தொண்டர்களின் பங்கு மற்ற யாருக்கும் குறைவானதாக இருக்கக்கூடாது; அந்த அளவுக்கு சிறந்த ஒத்துழைப்பை நாம் நல்க வேண்டும்.

"தலைவர் நல்லசிவம், தோழர்கள் அந்தோணி பிள்ளை, சின்னசாமி ஆகியவர்கள் சர்வ கட்சி அமைப்பில் பொறுப்பான காரியங்கள் செய்ய உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்ற இயக்கங்களிடமிருந்து தமிழ் மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ அதைவிட ஒரு படி அதிகமான சேவையை நம்மிடம் தமிழகம் எதிர்பார்க்கிறது என்பதை எந்த சமயத்திலும் மறந்துவிடக்கூடாது."

—இவ்வாறு 8-2-56 'சோஷலிஸ்ட்' இதழின் தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

டில்லி தீர்ப்பு: நாடெங்கும் கண்டனம்

பிப். 20—பொது வேலைநிறுத்தத்திற்குப் பேராதரவு

கழகக் கிளைகளின் நடவடிக்கைகள்

தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள் தமிழகத்துடன் இணைக்கப்படாததைக் கண்டித்தும், 'தட்சிணப் பிரதேச'த் திட்டத்தை எதிர்த்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதுடன், சர்வ கட்சிக் கூட்டணியினர் அறிவித்துள்ள பிப். 20—பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு அளித்தும், நாடெங்குமுள்ள தி. மு. கழகத் தோழர்கள், செயற்குழு மற்றும் பொதுக் கூட்டங்களில் முடிவுகள் மேற்கொண்டுள்ளனர். நடவடிக்கைகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

இடையகோட்டை

2-2-56ல் நடைபெற்ற இடையகோட்டை தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டத்தில் தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினையில் மத்திய ஆட்சியினரின் போக்கைக் கண்டித்தும், சர்வ கட்சித் தலைவர்களின் முடிவை வரவேற்றும், பொதுச் செயலாளரின் அறிக்கைக்கொப்ப, இடையகோட்டையில் வேறு அமைப்புக்கள் இல்லாததால் தி. மு. கழக கிளையே பிப். 20—பொதுவேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதெனவும், தீர்மானிக்கப்பட்டு, மற்றும் பல செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

சேலம்

4-2-56 இரவு 10 மணிக்கு, சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் 13-வது வட்டக் கழகத்தில் தோழர் ஏ. ஆர் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது, தேவிகுளம்—பீர்மேடு பற்றி நேருவின் நேர்மையற்ற தீர்ப்பைக் கண்டித்தும், 'தட்சிணப் பிரதேச' அமைப்பை எதிர்த்தும் பிப். 20-ல், சேலத்தில் பொது வேலை நிறுத்தம், கடை அடைப்பு கண்டன ஊர்வலம், பொதுக்கூட்டம் முதலியவைகளை சர்வகட்சிகளுடன் சேர்ந்து செய்ய வேண்டும் என்றும். மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

காந்தவல்லி - பம்பாய்

5-2-56 மாலை 5 மணிக்கு, தி. மு. கழகப் பணி மனையில் தோழர் கே. எஸ். சுப்பையா தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், திரு—கொச்சி தமிழகப் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்காததைக் கண்டித்தும் பிப் 20 — பொதுவேலை நிறுத்தத்தை வரவேற்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை 12-வது வட்டம்

5-2-56 காலை 9 மணிக்கு, சென்னை 12-வது வட்ட ஹாரர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், பிப். 20 பொது வேலை நிறுத்தத்தை அமைதியாக நடத்தும்படி பொதுமக்களைக் கேட்டுக்கொண்டும், நேருவின் அநீதியைக் கண்டித்தும், மற்றும் பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மதுரை

5-2-56 அன்று மதுரை நகர திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின், பொதுக் குழுக் கூட்டம் தோழர் கு. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றபோது, தேவிகுளம், பீர்மேடு பற்றிய நேருவின் தீர்ப்பைக் கண்டித்தும், பிப். 20—பொதுவேலை நிறுத்தத்தை வரவேற்றும், தட்சிணப் பிரதேச அமைப்பைக் கண்டித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருச்செந்தூர்

5-2-56 மாலை 7-30 மணிக்கு கடற்கரையிலுள்ள 'நாழிக்கிணறு' திடலில், திருச்செந்தூர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் கே. கணபதி தலைமையில் நடைபெற்றபோது, தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்கக் கோரியும், தட்சிணப் பிரதேசத் திட்டத்தைக் கண்டித்தும், சர்வகட்சிக் கூட்டத்தின் முடிவுகளை ஆதரித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முக்கூடல்

5-2-56 இரவு 9 மணிக்கு முக்கூடல் தி. மு. கழகச் செயற்குழு கூடி, தேவிகுளம், பீர்மேடு பற்றிய நேருவின் அநீதியான தீர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டி 20-2-56ல் நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தை ஆதரித்தும், முக்கூடலிலும் 20-2-56ல் கடையடைப்பு, வேலை நிறுத்தம் முதலியவைகளை அமைதியான முறையில் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

அருப்புக்கோட்டை

5-2-57 அன்று, அருப்புக்கோட்டை தி. மு. கழகச் சார்பில், தியாகராயர் வாலிபர் சங்கத்தின் முன்பு தோழர் பி. பி. என். நல்லதம்பி தலைமையில் நேருவின் தீர்ப்பைக் கண்டித்து பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மதுரை எஸ் முத்து, டபிள்யூ. டி, துரைசாமி, எம். எஸ். இராமசாமி ஆகியவர்கள் பிப். 20-ல் பொது வேலை நிறுத்தம் குறித்து விளக்கவுரையாற்றினர்கள்.

கல்லக்குடி

8-2-56 மாலை 6 மணிக்கு, கல்லக்குடி பிள்ளையார் கோவில் திடலில், தோழர் அ. தம்புசாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆச்சிமுத்து திராவிடப்பண் பாடினர். தோழர்கள் ஆர். செங்குட்டுவன், அன்பில் தருமலிங்கம், அ பொன்னம்பலனர், ஈ வே. கி. சம்பத் ஆகியவர்கள் தேவிகுளம், பீர்மேடு தமிழ்ப் பகுதியை கொச்சியுடன் சேர்த்திட்ட நேரு சர்க்கார் நீதியற்ற போக்கைக் கண்டித்தும், பிப்ரவரி 20-ல் பொது வேலைநிறுத்தத்தை அமைதியுடனும், பலாத்காரமின்றியும் வெற்றிகரமாக நடைபெற எல்லாத் தோழர்களும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொண்டும், 'தட்சிணப் பிரதேச' யோசனையைக் கண்டித்தும், மாநில மாநாடு பற்றியும் பேசினர்.

வாணியம்பாடி

8-2-56ல், திருவள்ளுவர் நிலையத்தில், தமிழ் நாடு எல்லைப் பாதுகாப்பு சமிட்டி, நிர்வாகக் கமிட்டி கூட்டம், தோழர் வி. எஸ். விஸ்வநாதம் தலைமையில் நடைபெற்றபோது, தட்சிணப் பிரதேச அமைப்பை வன்மையாகக் கண்டித்தும், வாணியம்பாடியில் பிப் -20ல் கடையடைப்பு செய்து, பொது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேட்டூர் அணை

8-2-56 மாலை 7 மணிக்கு பி. சோ. அலுவலகத்தில், சர்வகட்சி பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது. எல்லா கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். 'சர்வகட்சி கூட்டணி' அமைத்து, பிப். 20—பொது வேலை நிறுத்தத்தை வெற்றியுடன் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பெரியகுளம்

8-2-56 இரவு 9 மணிக்கு, பெரியகுளம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் எம். கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றபோது, பிப் 20-ல் நடக்கும் பொது வேலை நிறுத்தம் குறித்து, நகரில் தனிப்பட்டு இயங்கும் இதர சங்கங்களையும் அழைத்து சர்வ கட்சிக் கூட்டணி அமைப்பு ஏற்படுத்த வேண்டுமெனவும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், சமூகப் பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சிப் படிப்புக்காக இந்திய சர்க்கார் இதுவரை மொத்தம் ரூ. 2,07,017 உபகாரச் சம்பளங்கள் வழங்கியுள்ளனர். இவற்றிற்காகத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 8,60,000 ஆகும்.

காங்கிரசார் பொறுப்பு பற்றி அண்ணா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இப்படிப் பேசித்தான்—'மொழிவழி மாநிலம் அமைப்போம்' என்று கூறித்தான் காங்கிரசார் மக்களிடம் செல்வாக்குப் பெற்றனர்—'ஓட்டு'ப் பெற்றனர்; உயர்வு அடைந்தனர் — பதவியில் அமர்ந்தனர்.

"'மராட்டிய மண்டலம் அமைப்போம்; மாவீரன் சிவாஜி கண்ட மண்டலத்தை மீண்டும் உருவாக்குவோம்' என்று கூறித்தான் மராட்டியரைத் திரட்டினார்கள். ஆனால், இன்று வேறு ஏதேதோ பேசுகின்றனர்.

"'அலிபாபா' படம் காட்டுவதாகக் கூறி டிக்கட் தந்துவிட்டு 'அலி பாதுஷா' காட்டினால், கொட்டகைக்காரரை மக்கள் சும்மா விடமாட்டார்களே!

"ஒரு பெண்ணைக் கல்யாண மாப்பிள்ளையிடம் காட்டிவிட்டு, வேறொரு பெண்ணை திருமணப் பந்தலில் அமர்த்தினால், மாப்பிள்ளை சம்மதிப்பானா? மணமேடையில தகராறும், குழப்பமும் ஏற்படாதா?

"சாதாரணமாக சினிமா மேடையிலும், மணமேடையிலும் தகராறு வருமானால், மக்களிடத்தில் மொழி வழி மாநிலம் என்று கூறிவிட்டு, இப்போது 'தட்சிண இராஜ்யம்' என்றால் எப்படிக் குழப்பம் ஏற்படாதிருக்கும்?

"எனவே, காங்கிரசார், 'நாட்டை மீண்டும் காங்கிரஸ்தான் ஆள வேண்டும்' என்று கருதுவார்களேயானால், நாம் நடத்துகின்ற போராட்டங்களில் நம்மோடு சேர வேண்டும்—ஒன்றுபட வேண்டும்.

"காங்கிரசாரும் நம்முடன் சேர்ந்து பிப். 20-ந் தேதி பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்களேயானால், நிச்சயம் பிப். 21-ந் தேதி நேரு பண்டிதர், நியாயங்களைக் குறித்து எண்ணிப்பார்ப்பார்.

"நாமெல்லாம் நேருவுக்கு நிலைமைகளைச் சொன்னால், அது, எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்வதாகப்படக்கூடும்; எனவே, காங்கிரசாருக்கு பெரியதொரு பொறுப்பு இருக்கிறது; பண்டிதரை இங்கு கூட்டிவரும்போது இங்குள்ள நிலைகளை அவருக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

"அவருக்கு உயரே ஏற ஏற, கீழே இருப்பது தெரியவில்லை!

'நாம், கோபுரத்தில் அல்லவா அவரை ஏற்றி வைத்திருக்கிறோம்!

அலிபூர், திரிபுரா காங்கிரஸ் நடைபெற்ற காலத்தில் எல்லாம் அவர் மக்களிடத்தில் இருந்தார்—கீழே இருந்தார்; மக்களின் முகங்கள் அவருக்கு அப்போது நன்றாகத் தெரிந்தது; அந்த முகங்களில் பிரதி பலிக்கும் எண்ணங்கள் தெளிவாகத் தெரிந்தன; பஞ்சையையும்—பராரியையும் — பாட்டாளியையும், அவர் இதரரிடமிருந்து பிரித்துப் பார்க்க முடிந்தது; ஆனால், இப்போது கோபுர உச்சியிலிருந்து பார்க்கும் போது அவருக்கு மக்களின் உருவம்தான் தெரிகிறதே யன்றி, அவர்களின் முகங்கள் அல்ல! உயரே ஏற ஏற புல்கானினும் குருஷ்சேவும், டிசனோவரும், ஈடனும்தான் அவர் கண்களுக்குத் தென்பட முடிகிறது; எனவே, நாட்டு நிலைகளை அவருக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய கடமை காங்கிரசாருக்கு இருக்கிறது.

'நேரு பண்டிதருக்கு இப்போது மக்களிடத்தில் பெரும் அலட்சிய நோக்கு ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

"அவரது கருப்பு விழி எப்போதும் மேல் நோக்கி இருப்பதை நீங்கள் அவரது படத்தைக் கூர்ந்து கவனித்தால் தெரியவரும்.

"இருநிலைகளில்தான் ஒருவரின் கருப்பு விழி மேலே இருக்கும்; ஒன்று குடிபோதையில் இருக்கும்போது! மற்றொன்று, காணும் காட்சியில் அலட்சியமும், அதனால் கருத்தில் அலட்சியமும் இருந்தால் விழிகள் மேலே போகும்!

"நேரு பண்டிதர் மதுவிலக்கை அமுல் செய்பவர் என்பதனால், அவரது விழி மேலேயே சென்று கொண்டிருப்பதற்குக் காரணம், மக்களைப் பற்றிய பிரச்சினைகளில் பெரும அலட்சிய புத்தியை அவர் கொண்டிருப்பதுதான்!

"எனவே காங்கிரசார், தமிழ் மக்களின் எண்ணங்களை நேருவுக்குத் தெரிவிப்பதற்காக நம்மோடு சேரவேண்டும் என்று அவர்களை அழைக்கிறேன்.

"இதை விடுத்து நடைபெறப் போகும் பிப். 20 — பொது வேலை நிறுத்தத்தை எப்படியேனும் கெடுத்துவிடலாம் என நினைத்துச் செயல்படுவார்களேயானால், அது விரும்பத்தக்கதல்ல!

"ஒரு காரியத்தைச் செய்வது கடினம்; அதனைக் குலைப்பது சுலபம்!

"நல்ல சங்கீதக் கச்சேரி அமைவது கடினம்; அதனை ஒரு சிறு துமமினால் கெடுத்துவிட முடியும்!

ஆகவே, காங்கிரசார் கச்சேரியின்போது தும்மினால், கச்சேரியைக் கேட்கும் மக்களின் கண்களிலிருந்து தப்ப முடியாது; மக்களுக்கு, தும்முகிறவருக்குச் 'சளி' பிடித்திருக்குமானால், அதற்கு மருந்து என்ன என்பதும் தெரியும்.

"எனவே, தமிழக வரலாற்றில் சிறப்பு மிக்கதோர் இடம் பெறப்போகும் பிப். 20—பொது வேலைநிறுத்தத்தின்போது, சர்வகட்சி கூட்டணியுடன் சேர்ந்த, காங்கிரசாரும் தங்கள் பெயரை எதிர்கால வரலாற்றில் பொறித்துக் கொள்ள முன்வரவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்."

பிப். 20—பொது வேலைநிறுத்தம்

பி. சோ. கட்சி தேசிய நிர்வாகக் குழு முடிவு

கோவை, பிப். 11—

திரு-கொச்சி மாநிலத்துடன் தேவிகுளம்—பீர்மேடு தமிழ் வட்டங்களை இணைப்பது என்ற டில்லி சர்க்காரின் முடிவை எதிர்த்துத் தமிழகத்தில் பிப். 20-ந் தேதியன்று நாடெங்கும் பொதுவேலை நிறுத்தம் செய்வது என்ற சர்வ கட்சி முடிவை பி. சோஷலிஸ்டுக் கட்சியின் தேசீய நிர்வாகக் குழு, பெருந்துறையில் கூடியபோது ஒருமனதாக ஆதரித்திருககிறது.

சர்வகட்சி கூட்டணி முடிவுப்படி பிப். 20-ந் தேதி பொது வேலை நிறுத்தத்தில் பி. சோ. கட்சியும் கலந்துகொள்ளும் என்று தேசிய நிர்வாகக் குழு முடிவெடுத்திருக்கிறது.

புதுவையில் பொதுச்செயலாளர்

13—2—56 காலை 10-30 மணிக்கு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் கண்ணதாசன் ஆகியோர்கள் கார் மூலம் புதுவை வந்தனர்.

முன்னேற்பாட்டுடன், கழகத் தோழர்கள் பலரும், புதுவைச் சர்வகட்சிக் கூட்டணியினரும் மங்கள கான சபா—கட்டிடத்தில் குழுமியிருந்தனர். பொதுச்செயலாளர் முதலியோர் வந்ததும், அவர்களை வரவேற்று அழைத்துச் சென்று அமரச் செய்தனர்.

தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்கள், புதுவைக் கூட்டணித் தலைவர் பாரதிதாசன் அவர்களைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தலைவர் முன்னுரையாகச் சிறிது கூறித், தோழர் நெடுஞ்செழியன் அவர்களைப் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

பொதுச்செயலாளர் அவர்கள் பிப். 20 பொதுவேலை நிறுத்தம் பற்றித் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்கூறி, தோழர்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தமைக்குத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

பிப்ரவரி 20:

தென்னிந்திய நடிகர் சங்க சார்பில் என். எஸ். கிருஷ்ணன் ஆதரவு

"சர்வ கட்சி கூட்டணி வேண்டுகோளுக்கு இணங்க, பிப். 20-ந் தேதியன்று நடிகர் நடிகையர் யாரும் எந்தவித மான கலை நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளக் கூடாது; அன்று ஸ்டுடியோ, சினிமா, நாடக கொட்டகைகளும், சினிமா, டிராமா, படப்பிடிப்பு ஆகியவை நடத்தாமல் வேலை நிறுத்தம் செய்யவேண்டும்."

என்று கூறும் தீர்மானம் ஒன்றை தென்னிந்திய நடிகர் சங்கம் முடிவு செய்திருக்கிறது.

இந்தத் தீர்மானத்தை கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வெளியிட்டிருக்கிறார்.

தேவிகுளம்-பீர்மேடு: தி.மு.க.விளக்கம்

கள்ளக்குறிச்சி:

வள்ளுவர் திடல்

16—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
க. வேலாயுதம்

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
மு. பாண்டியன்
பொன்-சொக்கலிங்கம்

ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில்:
சர்வ கட்சிப் பொதுக் கூட்டங்கள்

ஸ்ரீ பெரும்புதூர்:

15—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
டி. சண்முகம் எம்.எல்.ஏ.

பேசுவோர்:
எம். சின்னசாமி (ஈரோடு)
எஸ். பி. ஆதித்தன்
காஞ்சி-கல்யாணசுந்தரம்
ஆர். ஸ்ரீனிவாசமூர்த்தி

★

திருமழிசை:

16—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
வி. கண்ணப்பன்

பேசுவோர்:
கா. அப்பாதுரை
அலமேலு - அப்பாதுரையார்
ஏ. வெங்கடாசலம்
கே. விநாயகம் எம்.எல்.ஏ.

சென்னை 8-வது வட்ட தி. மு. கழக தோழர்களுக்கு:

15—2—56 இரவு 9 மணிக்கு 8-வது வட்ட தி மு. கழக செயற்குழுக் கூட்டம், எண் 1. குப்பய்யா வீதியிலுள்ள கழகப் பணிமனையில் நடைபெறும்

சென்னை நகர மாணவர்களுக்கு வேண்டுகோள்

"சென்னை நகரில், பிப். 20 பொது வேலை நிறுத்தத்தில் மாணவர்கள் பங்குகொள்ளுவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று பிப்ரவரி 16-ந் தேதி மாலை 5 மணியளவில், சென்னை இராயபுரம் 'அறிவகத்'தில் நடைபெற இருக்கிறது. அதுபோது, சென்னை நகரிலுள்ள தி.மு.க. மாணவர் கிளையைச் சார்ந்த மாணவத் தோழர்களும், இதர கட்சி மாணவ நண்பர்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன். தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ளுவார்,"

என்று, தி. மு. க. மாநில மாணவர் கிளை அமைப்பாளர் தோழர் டி. கே. பொன்னுவேலு அறிவிக்கிறார்.

வடக்கு—தெற்கு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கிறது; அவற்றன் காப்பியும் ஒன்று; ஷகீதாவிலே தென்னாட்டு காப்பி பிரபலமடைந்திருப்பதை நான் காணகிறேன்; எனவே, தென்னாட்டவர் தங்களது பிரபல்யமான மணமான காபியை வடநாட்டவர் விரும்பச் செய்யவும், வடநாட்டவர், தெற்கேயுள்ள மக்கள் இந்தியை விரும்பச் செய்யவுமான வகையில் உழைக்கவேண்டும்' என்றும், 'யோசனை' கூறினாராம் அந்த அம்மையார், ஷகீதாவில் காங்கிரசில!

சுப்பிரமணியம் முகத்தில் மேலும் கரி!

சென்னையின் கோரிக்கைக்கு டில்லி தந்த ஆணவமான பதில்

சென்னை, பிப் 10—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநிலத்திற்கு 'பட்டைநாமம்'தான் என்பதை டெல்லி ஏகாதிபத்தியவாதிகள் தெளிவாகத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

'இன்னும் சற்று அதிகமாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன்' என்று, குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று மந்திரி சுப்பிரமணியம் பேசிக் கொண்டிருந்தார்; அவர் முகத்தில் மேலும் கரி பூசப்பட்டிருக்கிறது!

வெளியிடப்பட்டுள்ள இரண்டாம் திட்டத்தில், சென்னையின் பங்கு பற்றி அறிந்தவுடன் உயர்தர அதிகாரி ஒருவர் 'தென்னாட்டிற்கு ஊக்கம்தர திட்டத்தில் எதுமில்லை' என்று பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கிறார்.

'ரூ 2,214 கோடியில் மக்கள் —தொகைப்படி, ரூ 225 கோடியேனும் சென்னைக்கு வரவேண்டும்; ஆகவே, குறைந்தது ரூ. 210 கோடியேனும் ஒதுக்குக' என்று டெல்லிக்குச் சென்னை சர்க்கார் இறுதியாகக் கடிதம் அனுப்பியிருந்தனர்; ஆனால், அதற்கு நேரிடையான பதில் தாராமல், திட்டநகலை வெளியிட்டு, 'இவ்வளவுதான்' என்று கூறியிருக்கிறது டெல்லி!

சென்னைக்குத் தரப்படவிருப்பது ரூ 170·4 கோடி மட்டும் என்றும், இதிலும் இன்னும் குறைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும கூறப்படுகிறது

மாநில சர்க்கார் நிறைவேற்றப்போகும் திட்டப் பகுதிதான் இப்படியென்றால், டில்லி சர்க்கார் நேரடியாக மேற்கொள்ளுகிற பெரும் பெரும் தொழிற் திட்டங்களில் ஒன்றுகூடத் தென்னாட்டில் இடம்பெறவில்லை என்றும தெரிய வருகிறது.

இரண்டாம் திட்டத்தின் முதல் ஆண்டான 1956—57-ம் ஆண்டில, சென்னை சர்க்கார் திட்டத்திற்காக ரூ. 35 கோடிவரை செலவிடலாம் என்றும அதிகார வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

எல்லா மாநிலங்களுக்குமான—இந்தியா முழுமைக்குமான திட்டத்தில், மாநில சர்க்கார்கள் பங்கு ரூ 2 214 கோடி என்றும், இதில் சென்னை ஆந்திரா, மைசூர் திரு-கொச்சி, ஐதராபாத், புதுச்சேரி ஆகிய தென்னாட்டு மாநிலங்களின் மொத்தப் பங்கு ரூ 540,4 கோடி மட்டும்தான் என்றும் தெரிகிறது.

இந்தத் தென்னாட்டு மாநிலங்கள் எதிலும், டெல்லியே மேற்கொள்ளும் எந்த ஒரு பெரும் தொழில் திட்டமும அமையவில்லை என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

காமராசர்-இரு மேனன்கள் சந்திப்பு

'தட்சிணப் பிரதேசம்' பற்றி உரையாடினராம்

டில்லி நகரில் 'நமது' முதன் மந்திரி காமராசர், 'தட்சிணப் பிரதேசம்' பற்றிப் பெரிய மனிதர்களுடன் பேசியதாகக் கூறப்படுகிறது.

வி. கே. கிருஷ்ணமேனன், பனம்பள்ளி கோவிந்தமேனன் ஆகியோருடன் நீண்டநேரம் காமராசர் உரையாடினாராம்! என்ன பேசினார்கள்—என்ன முடிவாயிற்று என்பது 'மாம'மாகவே இருக்கிறது.

'பல மொழி மாநிலம் அமைக்க வேண்டும்' என்ற காங்கிரசின் தீர்மானத்தை ஆந்திரர்கள் ஏற்றுக்கொள்ளவதாக இல்லை என்று தெரியவருகிறது.

'முதலில விசால ஆந்திரம்; பின்னர்தான் இருமொழி மாநிலம் அல்லது பலமொழி மாநிலம்' என்கின்றனராம்; அவர்கள்! அவர்களைப் போலவே மராட்டியரும், 'முதலில் சம்யுக்த மராட்டியம்; பின்னர்தான் வேறு பேச்சு,' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டிருக்கின்றனராம்.

காமராஜ்ஜி' என்ன முடிவுக்கு வருவார் என்பது வெகு விரைவிலேயே தெரிந்துவிடும்

திருத்தம்

இன்றைய இதழ் 3-வது பக்கத்தில், 4-வது கலத்தில பிப்ரவரி 20 என்ற தலைப்பில் ஆரம்பமாகும் மூன்று வரிகளையும் 5-வது கலத்தின் 17-வது வரியுடன் சேர்த்து வாசித்துக்கொள்ளவும்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களால் அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று, 24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.